## திருவாரூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
(29.08.2015 முதல் 02.09.2015 வரை)

தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம், ஆடுதுறை – 612101

போன் : 0435 2472098 E-mail: dirtrri@tnau.ac.in - Fax: 04352472881


====================================================================

தேதி 28.08.15

### கடந்த 3 நாளில் நிலவிய வானிலை (25.08.2015-27.08.2015)

| காரணிகள் | கடந்த வார வானிலை |
|---|---|
| மழை (மி.மீ) | 0 |
| அதிகபட்ச வெப்பநிலை(டி.செ) | 36 – 37 |
| குறைந்தபட்ச வெப்பநிலை(டி.செ) | 27 |
| மேக மூட்டம் | 3 |
| ஈரப்பதம் (%) | 72 – 75 |
| காற்றின் வேகம் (கி.மீ.) | 5 |

### அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு

| காரணிகள் | எதிர்பார்க்கப்படும் வானிலை | | | | |
|---|---|---|---|---|---|
| | தேதி-1 29,08,15 | தேதி-2 30,08,15 | தேதி-3 31,08,15 | தேதி-4 01,09,15 | தேதி-5 02,09,15 |
| மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| அதிகபட்ச வெப்பநிலை(டி.செ) | 37 | 37 | 37 | 37 | 37 |
| குறைந்தபட்ச வெப்பநிலை(டி.செ) | 27 | 27 | 27 | 27 | 27 |
| மேக மூட்டம் | 3 | 3 | 3 | 3 | 3 |
| ஈரப்பதம் (%) | 54 – 72 | 55 – 73 | 56 – 74 | 57 – 75 | 58 – 76 |
| காற்றின் வேகம் (கி.மீ.,மணிக்கு) | 5 | 5 | 5 | 5 | 5 |
| காற்றின் திசை | தெற்கு | தெற்கு | தெற்கு | தெற்கு | தெற்கு |

- 29.08.15 முதல் 02.09.15 வரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மழை இல்லை.

### *வேளாண் அறிவுரைகள்*

**முக்கிய பயிர்கள் நெல், கரும்பு மற்றும் வாழை**

**நெல் குறுவை தண்டு உருளும் பருவம், சம்பா நிலம் தயாரித்தல் மற்றும் விதைத்தல்**

- சம்பா வயல்களில் நேரடிவிதைப்பு செய்யும் பொழுது டிராக்டர் மூலம் இயங்கும் விதைக்கும் கருவிக்கு ஏக்கருக்கு 15 கிலோ மற்றும் ஆட்கள் கொண்டு தெளிக்கும் பொழுது ஏக்கருக்கு 30 கிலோ விதை அளவும் பரிந்துரைக்கப்படுகிறது. விதைப்பதற்கு முன் விதைகளை சூடோமோனாஸ் என்ற எதிர் உயிரியினை ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் என்ற அளவில் விதை நேர்த்தி செய்து விதைக்கவும். இதனால் விதைகளின் முளைப்புத்திறன் மற்றும் வீரிய தன்மை அதிகரிக்கும். விதைகள் மூலம் பரவக்கூடிய நோய் கிருமிகள் அழிந்து விடும்.
- சம்பா நாற்றங்கால் தயார் செய்ய ஏக்கருக்கு 8 சென்ட் பாத்தியில் 400 கிலோ நன்கு மக்கிய தொழு உரம் அல்லது கம்போஸ்ட் கலந்து இடவேண்டும். சம்பா நாற்றங்காலில் ஒரு சென்ட்க்கு 2 கிலோ வீதம் டி.ஏ.பி மேலுரமாக இடவேண்டும்.
- நேரடி விதைப்பு செய்த வயல்களில் பயிர் முளைத்த 3-4 தினங்களுக்குள் ஏக்கருக்கு பென்டிமெத்தலின் 1 லிட்டர் அல்லது பிரிடிலாக்குளோர் ரூ சேப்னர் (சோபிட்) 500 மிலி என்ற அளவில் விதை முளைக்கப் போதுமான மழை பெய்த உடனேயே தெளித்துக் களைகளைக் கட்டுப்படுத்தலாம்.
- குறுவை நெற்பயிரில் தண்டு உருளும் பருவத்தில் கருப்பு நாவாய் பூச்சி தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த புரோபனோபாஸ் 50 இ.சி. மருந்தினை ஏக்கருக்கு 400 மில்லி என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

**இயக்குநர்**